**கவனிக்க.**- *2011.01.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1690 - 2011 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2011.01.21

*1690 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 73 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, சனவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, சனவரி மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழிநுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### தொழிநுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பராமரிப்புப் பொறியியலாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

தொழிநுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பராமரிப்புப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் இல. 01-07 பக்கம் 1 இலும் எஞ்சியுள்ளவை பக்கம் 2 இலும் இருக்குமாறு கீழ்தரப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டு, கொழும்பு 10, அ. பெ. எண் 557, தொழிநுட்ப கல்வி பயிற்சித் திணைக்களம், பணிப்பாளர் நாயகத்திற்கு 2011.02.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பராமரிப்பு பொறியியலாளர் பதவி" எனக் குறித்திருத்தல் வேண்டும். வர்த்தமானி அறிவிப்புக்கேற்ப அடிப்படைத் தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. **தொழில் நியதிகள்**.- (அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுள்ளதும் ஆகும். தெரிந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் "விதவைகள் அநாதைகள்" ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அளிக்க வேண்டியதோடு மூன்றாண்டு தகுதிகாண் நிலையில் இடப்படுவார்.

(ஆ) நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.

(இ) வினைத்திறமைகாண் தடை.- பொது நிருவாகச் சுற்றுநிருபம் இல. 20/2001 இற்கமைய பதவிக்கு நியமிக்கப்படும் ஒவ்வோர் அலுவலரும் சம்பளத் திட்டத்தின் 4 ஆம் படிக்கு முன்பாக 1 ஆம் வினைத்திறமைகாண் தடையையும், 7 ஆம் படிக்கு முன்பாக 2 ஆம் வினைத்திறமைகாண் தடையையும் பூர்த்திசெய்ய வேண்டும். விதித்த காலத்தினுள்ளே வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்யத் தவறுதலின் விளைவாகச் சம்பள ஏற்றம் பின்போடப்படும் அதே வேளை அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மிகையாக எடுக்கப்படும் காலம் சம்பள ஏற்றம் பின்போடப்படும் காலமாகக் கருதப்படும்.

(ஈ) இப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் பொது நிருவாகச் சுற்றுநிருபம் இல. 07/2007 இற்கமைய நியமனத் திகதியிலிருந்து 5 ஆண்டுகளினுள்ளே இரண்டாம் மொழியிலான தேர்ச்சியைப் பெறுமாறு எதிர்பார்க்கப்படுவர். விதித்த காலத்தினுள்ளே இரண்டாம் மொழியில் தேரச்சியைப் பூர்த்திசெய்யத் தவறுதலின் விளைவாகச் சம்பள ஏற்றம் பின்போடப்படும். இவ்வலுவலர்களின் மொழித்தேர்ச்சி பிரதான பாடமாக (2 ஆம் மொழியாகவோ, விருப்பத்திற்குரிய பாடமாகவோ இருத்தலாகாது) க. பொ. த. (சா. த.) இல் சிங்களத்தில்/தமிழில் சித்தியும் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியும் அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் விசேட திறன் பரீட்சையில் சித்தியும் ஆகும்.

3. **சம்பளமும் படிகளும்**.- இப்பதவிக்குரிய மாதத் திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-645X10-790X8-1,050X17- ரூபா 53,555 ஆகும். பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இல. 6/2006 இற்கமைய கொடுப்பனவுகள் செய்யப்படும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு மேலே பந்தி 2 இல் குறிப்பிடப்பட்ட வினைத்திறமைகாண் தடையை பூர்த்திசெய்தலுக்கு உட்படும்.

4. **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பாகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ளமை தொடர்பாகச் சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியில் 25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மேல் வயதெல்லை பொருத்த மாட்டாது.

(இ) சிறந்த ஒழுக்கப் பண்பைக் கொண்டும் உடல் ரீதியில் தகுதியாகவும் இருக்க வேண்டும்.

(ஈ) கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.- ஓர் அங்கீகரித்த பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பொறிமுறை எந்திரவியலிலான ஒரு பட்டம்

அத்துடன்

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிற்சாலையில்/தொழிலகத்தில் பொறியத்தையும், பொறித் தொகுதியைப் பராமரிப்பதிலும் 5 ஆண்டு அனுபவம்.

5. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பாக இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நியமிக்கப்படுவார்.

6. உம்மால் உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் :-

(i) பிறப்பு பதிவுச் சான்றிதழ் (சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்திற்கு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ii) விவரச் சான்றிதழுடன் பட்டச் சான்றிதழ்கள் அல்லது ஏனைய கல்விச் சான்றிதழ்கள்

(iii) அனுபவத்தை உறுதிப்படுத்தும் வாண்மைத் தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப தகைமைச் சான்றிதழ்

(iv) சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சித்தியடைந்த உயர் பரீட்சை சான்றிதழ்கள்

7. அரச சேவையில் உள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களங்களின் தலைவர்களினூடாக அனுப்பப்பட வேண்டும்.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவைகளில் உள்ள நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளை உசாவுமாறு வேண்டப்பட்டுள்ளது.

9. இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், வெற்றிடங்களை நிரப்பாதிருக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

10. தாபனக்கோவையின் அத்தியாயம் II இன் பிரிவுகள் 10-12 இன் வாசகங்கள் இப்பதவிக்கு உகந்தனவாகும்.

எஸ். எஸ். ஹேவாபத்திரன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு.

இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு,
"நிபுணதா பியச",
இல. 354/2, எல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 05.
2011.01.21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு**

தொழிநுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பராமரிப்புப் பொறியியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(முதலெழுத்துக்கள் இறுதியில் (பேரெழுத்துக்களில்) (உ-ம் :- SILVA A. B)

2. முழுப்பெயர் :----.

3. (அ) உத்தியோகபூர்வ முகவரி :----.

(ஆ) தனிப்பட்ட முகவரி (பேரெழுத்துக்களில்) :----.

(இ) சொந்த தொலைபேசி எண் :----.

4. (அ) இலங்கையரா ? (ஆம்/இல்லை) :----.

5. (அ) பிறந்த திகதி :-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

(ஆ) தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

7. தற்போதைய பதவி பற்றிய தகவல்கள் :

(அ) பதவியும் நியமனத் திகதியும் :----.
(ஆ) நிரந்தரமானதா/தற்காலிகமானதா ? :----.
(இ) ஓய்வூதியமுள்ளதா, ஓய்வூதியமற்றதா ? :----.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.
(உ) திணைக்களம் :----.
(ஊ) நிறுவகம்/பணியாற்றும் இடம் :----.

8. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி சான்றிதழ்கள் உட்பட)

| பரீட்சை | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

9. முந்திய நியமனங்கள் (செப்பமான திகதிகளுடன் காலவரண் முறைப்படி குறிப்பிட வேண்டும்.)

| திணைக்களம்/நிறுவகம் | பணியாற்றும் இடம் | பதவி | நிரந்தரமானதா/ தற்காலிகமானதா ? | சேவைக்காலம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொடக்கம் | வரை |
| | | | | | |

10. சட்ட நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்புப் பெற்றவரா ? ஆம் எனின் விபரங்களைத் தருக :----.

11. அரசாங்கத் திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் பணியாற்றினால், சேவையைவிட்டு நீங்கியமைக்குக் காரணங்களைக் குறிப்பிடுக :----.

12. உமக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை எதுவும் உள்ளதா ? ஆம் எனின், விவரங்களைச் சுருக்கமாகக் கூறுக :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமாகுமென இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு உள்ள எவையேனும் விபரங்கள் பொய்யானவை எனவும் பிழையானவை எனவும் தெரிந்தெடுக்கப்படுமுன்னர் காணப்பட்டால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் காணப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பதவியை வகிக்கும் விண்ணப்பதாரிகளாயின் -

**திணைக்களத் தலைவரின் விதப்புரை**

மேற்குறித்த அலுவலரினால் 01 தொடக்கம் 12 வரைக்கும் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் ஆகுமென இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

1-373

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் பின்வரும் பதவியில் நிலவும் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் காட்டப்பட்டவாறு தகைமைகளைக் கொண்ட நல்ல உடல் ஆரோக்கியமும் குணநலமுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மொழி உத்தியோகத்தரும் (மும்மொழி) ஆராய்ச்சி உத்தியோகத்தரும் :

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "தலைவர், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, 4 ஆம் மாடி, "பாஷா மந்திரய", இல. 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய" என்னும் விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து பதிவுத்தபாலில் 2011.02.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறித்த விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**1. மொழி உத்தியோகத்தரும் (மும்மொழி) ஆராய்ச்சி உத்தியோகத்தரும் (பதவி 01) :**

(i) கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற பட்டம்

(ஆ) மும்மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) மொழிபெயர்ப்புச் செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.
கணனி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டவராக இருத்தல் வேண்டும்

**குறிப்பு**.- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு நூல்களை மொழிபெயர்த்திருக்கும் விண்ணப்பதாரர்பால் விசேட கவனஞ் செலுத்தப் படும்.

(ii) வயதெல்லை.- 2011.02.18 ஆந் திகதியன்று 30 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இங்கு குறிப்பிடப்பட்ட உச்ச வயதெல்லை அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபனங்களில், சபைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையதன்று.)

(iii) சம்பள அளவுத்திட்டம்.- இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 24,595-5X475-5X645-15X770- ரூபா 41,745 ஆகும். (இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் அவரின் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்குமிணங்க இந்த சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானதொரு படிநிலையில் வைக்கப்படுவார்.)

(iv) ஆட்சேர்ப்பு முறை.- அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் இதற்கென நியமிக்கப்படுகின்ற விசேட சபையொன்றின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப் படுவதன் மூலம் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

**சேவை நிபந்தனைகளும் விண்ணப்பிக்கும் முறையும்.-** (அ) இப்பதவி நிரந்தரமானது. நியமனம் பெறுபவர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உதவுத் தொகை செலுத்துதல் வேண்டும். ஊழியர் தனது திரட்டு சம்பளத்திலிருந்து 8% ஐ உதவுத்தொகையாகச் செலுத்த வேண்டும் என்பதுடன் ஆணைக்குழு 12% ஐச் செலுத்தும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% ஐ ஆணைக்குழு செலுத்தும்.

(ஆ) தகுதிகூர் காலம் மூன்று வருடங்களாகும். நியமனம் பெறுபவர் தனது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தங்களுக்குரிய மொழி தொடர்பில் உயர்தர கற்கைநெறியில் சித்தியடைதல் வேண்டும். (அதாவது சிங்கள உத்தியோகத்தராயின் தமிழ் மொழி உயர்தர கற்கைநெறியிலும் தமிழ் உத்தியோகத்தராயின் சிங்கள மொழி உயர்தர கற்கைநெறியிலும் சித்தியடைதல் வேண்டும்.)

(இ) நீடிக்கப்படுகின்ற தகுதிகூர் கால எல்லைக்குள்ளேனும் மேற்குறிப்பிட்ட உரிய மட்டத்தில் தேர்ச்சியைப்பெறத் தவறும் நியமனம் பெறுபவரின் சேவை முடிவுறுத்தப்படும்.

(ஈ) அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் நியதிச்சட்ட சபைகளிலும் கூட்டுத்தாபனங்களிலும் சேவையாற்றும் அலுவலர்கள் தங்களது விண்ணப்பங்களைத் திணைக்கள/நிறுவனத் தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.

(உ) தகுதியுள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் குறித்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்.

(ஊ) இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளுக்குப் புறம்பான விடயங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் அரச கரும மொழிகள் ஆணைக் குழுவினால் எடுக்கப்படும்.

(எ) மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்புடையதற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஏ) நியமனம் பெறுநர், காலத்துக்கு காலம் அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்படுகின்ற தேர்ச்சிகளையும் தகுதிகளையும் பெறுதல் வேண்டும்.

தலைவர்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு,
"பாஷா மந்திரய",
341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2011, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### அரசகரும மொழிகள் ஆணைக்குழு

.............................................................................................. பதவி

1. விண்ணப்பதாரர் பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   1.2 முழுப் பெயர் :-----.

2. முகவரி :-
   2.1 நிரந்தர முகவரி :-----.
   2.2 அலுவலக முகவரி (இருப்பின்) :-----.

3. பால் :
ஆண் - 1
பெண் - 2
(பொருத்தமான இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. வயது :- (பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கவும்)
4.1 பிறந்த திகதி :-----.
4.2 2011.02.18 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :-----.

6. தேசிய இனம் :-----.

7. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :-
(i) க. பொ. த. (சாதாரண தரம்) :
ஆண்டு :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ii) க. பொ. த. (உயர்தரம்) :
ஆண்டு :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(iii) பட்டம் :

| பட்டத்தின் பெயரும் பல்கலைக்கழகமும் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) டிப்ளோமா பட்டம் :

| டிப்ளோமா பட்டத்தின் பெயரும் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயரும் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(v) பின்பற்றியுள்ள பிற கற்கைநெறிகள் :

| கற்கைநெறியின் பெயர் | கற்கைநெறியை நடாத்திய நிறுவனத்தின் பெயர் | கற்கைநெறியின் காலம் |
|---|---|---|
| | | |

8. அனுபவம் :

| பதவிப் பெயர் | நிறுவனம் | சேவைக்காலம் | விலகிச் சென்றமைக் கான காரணம் |
|---|---|---|---|
| | | | |

9. கணனி பற்றிய அறிவு :-----.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

10. நீங்கள் ஏதாவது தவறு பொருட்டு நீதிமன்றமொன்றினால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா ? (ஆம்/இல்லை) :-----.
(ஆம் எனில், அவை தொடர்பான தகவல்களைக் குறிப்பிடவும்) :-----.

இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் விடயங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டிருக்கும் விபரங்களில் எவையேனும் நான் தெரிவு செய்யப்படுமுன்னர் பொய்யானவையாக அல்லது பிழையானவையாக கண்டுபிடிக்கப்படின் நான் தகைமை இழப்புக்கு உட்படுவேன், என்பதையும் அத்தகைய தவறு நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு

எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

..................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**அரச திணைக்களம்/அமைச்சு/அதிகார சபை/ஏனைய நிறுவனத் தலைவரது சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ......................................................... இத்திணைக்களத்தில்/ அமைச்சில்/ கூட்டுத்தாபனத்தில்/ அதிகார சபையில்/மாகாண சபையில் ................................ ஆக பணியாற்றும் அலுவலரது விண்ணப்பத்தை இத்தால் அனுப்புகிறேன். இவரது வேலையும் நடத்தையும் திருப்தியானது/திருப்தியற்றது. இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிக்க முடிவிப்பது பற்றி கவனத்தில் எடுக்கப்படும்.

.........................................................................
திணைக்கள/அமைச்சு/கூட்டுத்தாபன/
அதிகார சபை/மாகாண சபை
தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

...........................................................,
கையொப்பம்.

1-421

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.